ஓலை 65 | ஓசை 185 | மார்ச் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது**

ஒருவருக்கு ஒரு நன்மையும் நாம் செய்யாத போதும். அவர் நமக்கு உதவினால், அதற்குக் கைம்மாறாக மண்ணுலகையும் விண்ணுலகயும் கொடுத்தாலும் சமம் ஆகாது.


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

## செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்

ஆசிரியர்கள்

## அ.வில்சன்
## குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

## ச.சூர்யா, அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# பொன்போன்று பொலிந்திடுவாய் புவிதோறும் பண்பில்!

## பா வகை: கழிநெடிலடி ஆசிரிய மண்டிலம்

உயர்வெய்த படியாகும் பண்பேதான் வாழ்வில்
உயிருக்கும் மேலாக போற்றவேண்டும் மனத்தில்
கயமைகளை முறிக்கின்ற கண்துஞ்சா பொறுப்பு
கடமையாகி காத்தருளும் புவிமீதில் பண்பு
வியக்கின்ற வகை தன்னில் விரிந்திட்டால் பண்பு
விடியலையும் புகுத்திடுமே இருள்மந்தை வென்று
செயல்களிலே பண்பதுவும் சிறப்பாக மிளிர
செதுக்கிடலாம் புதுவுலகை சீர்தூக்கித் தானே



கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# கல்வி கரையில

ஏடுகள் திறக்கப்பட்டு
எழுத்துகள்
வாசிக்கப்பட்டால்
மட்டுமே
விழிகளின் அறியாமை
மூடப்படுகிறது

இருட் காட்டின்
கருஞ் சுவர்களில்
நிலாக்கள்
வரைகின்றன
எழுதுகோல்கள்

தீச்சுடர் சுமக்கா
சோற்றுப்பருக்கைகள்
மார்தட்டிக் கொள்ள முடியாது
இரைப்பை யாசகத்திற்கு
ஈன்ற வள்ளல்களாக

புத்தகம் சுமக்கா
மூளையும்
செக்கு மாட்டு
சிந்தனைகளில்
முடியா
பயணம் கொள்ளும்

கல்வி
கல்வெட்டு
உங்களுக்கான
மதிப்புரை
செதுக்குகிறது



ஒழுக்கமும்
நேர்மையும்
அதற்கான
பாதை
வகுக்கிறது

மதிப்புரை
உயர்த்தி
சமூகத்தின்
முகவுரை
எழுதுங்கள்

எதிர்கால
திறவுகோல்களே
மறைந்திருக்கும்
பூட்டுகளை
மகத்துவமாய்
வெளிக்கொணரும்
கல்வி கரையில்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# தட்டிக்கேள்!

தவறைத் தவறென்று
தட்டிச் சொல்லிடு.

வன்முறை செய்வோரை
இன்னல் இழைப்போரை

அருகே அழைத்து
ஆவேசமாய்க் கேட்டிடு.

கேட்டால் தான்
கெடுதல் குறையும்.

கேட்காமல் செல்வது
கேண்மை ஆகாது.

தன்னலம் அகற்றினால்
இன்னலம் விளையும்.

கை தட்டப்
பிறந்திடும் ஓசை

கரங்கள் இணைய
கவலை அகலும்.

நமக்கு இல்லையென
நாம் ஏகுதல்

நமக்கு நாமே
வைத்திடும் கொள்ளி.

தட்டிக் கேட்போரைத்
தவறாய்ப் பேசுவர்.

சுட்டி காட்டுவோரைச்
சுடுவர் சொற்களால்.

அதற்காய் நாளும்
அஞ்சி ஓடாதே.

வாழ்வது ஒருமுறை
வாழ்த்தட்டும் தலைமுறை.

மனதினில் கலங்கி
மதி கெடாதே.

ஒருநாள் விடியும்
ஓர்ந்திடு அதையும்.

எட்டி நின்றே
எதற்கு பதுங்குகிறாய்.

துணிந்து கேள்
துயரை விலக்கலாம்.

கவிஞர் செ.கலைவாணி, மேட்டூர் அணை

# காத்திருக்கப் போகிறேன்



என் மௌனத்தை
உடைத்துக்கொண்டு
வந்த வார்த்தைகள்
குபீரென்று சிதறலாயின
கோபக்கணையின்
முடிச்சுகளோடு.

சிதறிய வார்த்தைகளில்
வன்சொற்களின்
ஆதிக்கம் மேலோங்கி
இருப்பதை
எதிரிலிருக்கும் உன் முகத்தில்
காணக் கூடுகிறது
என்னால்.

நான்
தவிர்த்திருக்கலாம்.
என் மௌனம் உடைய
காரணமாயிருந்த
உன் தகாத வார்த்தைகளை
செவி சாய்த்திடாமல்.

முட்டாளாகிப்
போக வேண்டுமென்பது
என் வரையறைக்குள்
முடுக்கப்பட்டிருப்பதை
அறியாமல்
என் மௌனம் உடைய
முட்டாளாகிப் போனேன்.

இயல்பாய் ஒரு மௌனம்
பொலிவுடன்
என்னில் குடிகொள்ள
இன்னும்
சிறிது காலமாகலாம்.
அதுவரை
காத்திருக்கப்போகிறேன்.

எப்போதும்
எதிரியின்
வஞ்சக வலையிலும்
சூட்சும வட்டத்திலும்
விழுந்துவிடக் கூடாதெனும்
எல்லைமீறாத
தீர்மானத்துடன் இருத்தலே
எனக்கு
நன்மையென்று அறிகிறேன்
இப்போது.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# திரும்பிப் பார்க்கிறேன்

ஆறுதல் இல்லா பொழுதுகள்
கண்ணீர் நனைத்த நினைவுகள்
ஏமாற்றம் தந்த வலிகள்
ஏளனம் செய்த உறவுகள்
திக்கெங்கும் மறுப்பு மொழி
தனிமை தந்த தவிப்பு
புன்னகை மறந்த இதழ்கள்
புழுதி படிந்த பாதம்.

வழியெங்கும் கண்ணீர் துளிகள்
கானல் நீராக மகிழ்ச்சி
கடந்து வந்த பாதை
திரும்பி பார்க்கிறேன்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# மாறிபோனேன்

வாழ்க்கையில் யாரிடமும்,
எப்போதும் எதையும்,
எதிர்பார்க்காமல் ,
வாழ்ந்த நான்,
உன்னிடம் மட்டும்,
இப்போது
பாசத்தை எதிர்பார்த்து
மாறிபோனேன்.



கவிஞர் ஜெ. சூரேகா, திண்டுக்கல்

# ஆதலால் எதற்கு ?

மறந்தும் என்னிடம்
பேசிவிடாதே
நான் புதிதாக மாறிவிட்டேன்
நீ யார் என்று கேட்டாலும்
கேட்டுவிடுவேன்.

தெரிந்தும் யாருக்கும்
சொல்லிவிடாதே
அவன் மாறிவிட்டான் என்று
நீ மாற்றிவிட்டாய்
என்று சொன்னாலும்
சொல்லிவிடுவார்.



உன் வருத்தங்கள்
எனை வருத்தாது
எந்த திசையில்
சூரியன் மறைகிறதோ
அதன் எதிர் திசையில் துளிர்க்கிறது
என் வசந்த கால மரங்கள்.

பனிக்கால
வியர்த்தலுக்கு
காரணம் இந்த காதலோ
ஆதலால் எதற்கு?

கவிஞர் கோ. லோன்குமார்

# வாராது வந்த வான்மதியே



இரவோடு இணைந்தாய்
கனவினில் கனிந்தாய்

இதழ்களில் இனித்தாய்
இதயத்தில் கலந்தாய்

செந்தமிழ்ப் பழகியே
செவிதனில் செப்பினாய்

உயிரோடு உறவாடி
உணர்வினில் உறைந்திட்டாய்

முக்கனியின் தித்திப்பை
இதழ்களில் வைத்திட்டாய்

வேல்விழியின் பார்வையால்
என்னையே வீழ்த்திட்டாய்

மன்மதனின் துணையோடு
காதலைத் தந்திட்டாய்

இரதியின் அழகோடு
வளைத்திட்டாய் அன்பே

சிற்றிடையில் சிதைந்தே
சிலிர்ப்பானேன் நானே

அழகின் அழகே
அகத்தினுள் மலர்ந்தாயே

மேனியின் தீண்டலில்
தேவதை அம்சமானாயே

நெஞ்சத்தின் நினைவுகளில்
நிறைந்திட்டாய் கண்ணே

புதுராகம் இசைத்தே
புத்துணர்வு தந்தாயே

தேனிசை இராகமே
மோகமது தீர்ந்திடுமோ

ஆசைகள் ஆர்ப்பரிக்க
இன்பமும் உண்டாகுதே

வாராது வந்த
வான்மதி நீயேதான்.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# மந்திர உலகம்

சூதும், பொறாமையும்
வஞ்சகமும், துரோகமும்
நிறைந்த தந்திர உலகில்
பிறப்பெடுத்தது ஒரு மாயை!
கண்முன் விரியும்
காட்சிகள் மாயை!
நித்தம் நித்தம் இந்த
மந்திர உலகின் தளைகளில்
சிக்குண்டு சிதறுவதே
விதியென்று நம்மை
நம்ப வைத்த மாயை!
வேண்டியது கிடைத்திட,
அடுத்தவரை அழித்திட,
மந்திரத்தை நம்பிடும்
மாயவலையில் சிக்குண்டு
சிதறுகிறோமே!
ஜிகினா காகிதம் சுற்றி
நம் கண்ணில் படும்
பிம்பங்களை ஆறாம் அறிவு
கொண்டு ஆராய்ந்து
தந்திர உலகின் தளைகளை
வென்றிடலாம்!.
வாழ்க்கைப் பாதையை
மாற்றிடலாம்.



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை.119

# சுவர்கள்

சுவர்களுக்கு எல்லாம் தெரியும்!
சுவர்கள் எல்லாவற்றையும்
பார்த்துக் கொண்டே இருக்கின்றன!
சுவர்கள் எதையும் எப்போதும்
வெளியில் சொல்வதேயில்லை!
சுவர்களுக்கும் காதுகள் இருக்கிறது!
சுவர்கள் எப்போதும் மௌன சாட்சியங்கள்!
சுவர்கள் சுவாரஸ்யமானவை!
நீளமும், உயரமுமாய் இருக்கும்
சுவர்கள் கம்பீரமானவை!
மனிதர்களைப் போலவே
வளர்ந்த சுவர்களுக்கு இருக்கும் மரியாதை
குட்டிச் சுவர்களுக்கு இருப்பதில்லை!
சுவர்கள் எல்லை படை வீரர்கள்!
வேலைகள் தராத பாதுகாப்பை சுவர்களே தருகின்றன!
வெட்ட வெளியில் ஏற்படும் நிர்வாணத்தை
சுவர்கள் ஆடைகளாக மாறி மறைக்கின்றன!
சுவர்கள் ரகசியம் அறிந்தவை!
இருந்தும் புறம் பேசாதவை!
சுவர்களின் தொடர்ச்சி அறைகளாகின்றன!
குழந்தைகள் இருக்கும் எல்லா வீடுகளிலும்
சுவர்கள்தான் வண்ணக் கரும்பலகை!
மனிதர்களுக்கு மதில் சுவர்கள் தான்
முதல் சமூக ஊடகம்!
பொழுது போகாதவர்களுக்கு
சுவர்கள்தான் சிம்மாசனம்!
சுவர்களின் விரிசல்கள் கிலி ஏற்படுத்தினாலும்
விழும் சுவர்கள் விடுதலை உணர்வை வழங்குகின்றன!
மனித வாழ்க்கையில்
சுவர்கள் தவிர்க்க முடியாதவை!
சுவர்கள் விழும் ஒவ்வொரு முறையும்
புதிய சுவர்கள் எழும்பிக் கொண்டுதான் இருக்கின்றன.
இயற்கையின் இடர்பாடுகளுக்கு
சுவர்கள் வீழ்கின்றன!
உயரமாய் சுவர்கள் எழுப்பப்பட்டதற்கும்,
பலமற்ற சுவர்கள் கட்டப்படுவதற்கும்
காரணம் யாரென்ற ஆராய்ச்சி
உயிர் பலி நிகழும் போது மட்டும்
கேட்டுக் கொள்கிறார்கள்!



*கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு*

# தீண்டாதே என்னை

அன்னையாகப் போற்றுகின்றாய்
அறுத்துப் போடுகிறாய்
கோதையாக வாழும்
கோழிக் குஞ்சினையே

மலர் போல்
மென்மை என்கின்றாய்
பூப்பறிக்க கோடாரி
பூசாரியாக மாறுகின்றாய்.



எல்லோரும் இந்நாட்டு
மன்னர்கள் தானே
என்னை ஏன்
மகாராணியாய் மதிக்காதிருந்தாய்.

காமக் கண்ணோடு
காச நோயாளியாய்
காணும் பெண்ணையெல்லாம்
காயப்படுத்த இச்சிக்கின்றாய்.

விலங்குகளாய் இங்கு
விசுவரூபம் எடுத்த
வில்லாதி வில்லன்களே
விகல்பமின்றி பாருங்களேன்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# மணிமேகலை (ஐந்து)

4. பளிக்கறை புக்க காதை
1. உவவனக் காட்சிகள்
(சுதமதி மேகலையை அழைத்துச் செல்கிறாள்)
ஆடரங்கில் பெண்கள் போல் மயில்கள் ஆடுகின்றன
ஆடும் மயில் போல் மந்திகள் மரத்தில் ஆடுகின்றன
பாடும் குயில் ஓசை மலர்வனத்தின் பின்னணி இசை
கூடும் தும்பிகள் ரீங்காரத்தில் மலர்கள் மலர்கின்றன

தடாக மலர்களில் தனியாக தாமரை மலர் ஒன்று
படர்ந்து விரிந்த இதழ்கள்மேல் அரச அன்னம்
அடர்ந்த சம்பங்கோழிகள் குரல் ஒலிக்கின்றன
கடம்பை மலர்கள் சோழனின் வெற்றிகள் கூறின.

தாமரை முகத்தில் தேன் உண்ண வண்டுகள் மொய்க்கின்றன
காமக் கயல் விழிகள் கொத்த பறக்கின்றன சிச்சிலிப் பறவை.
சாமரம் வீசுவது போல் தன் கைகளை வீசி விரட்டுகிறாள்
பாமகள் மணிமேகலை மல்ர்வனத்தைக் கண்டு மகிழ்ந்தாள்

2. பட்டத்து யானை
மதம் கொண்ட பட்டத்து யானை காட்டாறாக ஓடி வருகிறது
அதன் மூர்க்க குணத்தால் பாகன் வீசி எறியப்பட்டான்
பதட்டமாக எதிர் வருபவரை தும்பிக்கையால் சுழற்றியது
மதச்செருக்கினால் கடைவீதியே சின்னாபின்னமானது

3. சோழ இளவரசன் உதயகுமரன் ;
உதயகுமரன் மத யானையின் வெறிச்செயல் கண்டான்
சிதறி ஓடுபவரை காக்க யானையை எதிர் கொண்டான்
தைரியமாக தும்பிக்கை ஏறி யானையை அடக்கினான்
மதங்கொண்ட யானை பாகனோடு பதுமைபோல் சென்றது

4. எட்டிக் குமரன் துயரம்
கணிகையுடன் யாழ் மீட்டிக் கொண்டிருந்தான்எட்டிக் குமரன்
தணியாத துயர் ஒன்று அவன் மனதில் நீராடிக்கொண்டிருக்க
பணிவான கோவலன் கண்ணகி பட்ட துன்பம் அவனை உறுத்த
கணிகை யாழை மறந்தான் மேகலை தனிமை கண்டு அழுதான்
"துணிவோடு மேகலையை கொண்டுவருவேன்" என்றான் உதயன்

5. மணிமேகலையின் அச்சம்
குமரன் வருவதை அவன் தேரொலி கேட்டு நடுங்கினாள்
சமர் வீரன் தன்னை காதலிப்பதை அறிவாள் மணிமேகலை
"அமரகமானது மனம் இவனிடமிருந்து விலக நினைக்கிறேன்
எமக்கு ஒரு வழி சொல்?" கேட்டாள் சுதமதியிடம் மணிமேகலை
(அமரகம் ; போர்க்களம் )
6. "பளிக்கறை மண்டபத்தில் புகுந்து கதவை தாளிட்டுக்கொள்
வெளியே நிற்பேன் நான் சொல்லும்வரை வராதே" சுதமதி
ஒளிவுமறைவின்றி எல்லா இடங்கள் தேடினான் உதயகுமரன்
களிப்போடு சுதமதி கண்டு எங்கே மணிமேகலை ? வினவினான் .

7. சுதமதியின் அறிவுரை:
போர் வலிமையும் கனிவும் உள்ள வீரனே நான் கூறுவதை கேள்
பார்வையில் ஊனம் இருந்தால் காட்சிகள் தவறாகத் தெரியும்
நார் மலரோடு சேர்ந்து மாலையாகிறது நாருக்கு என்ன பெருமை
பாருக்கு ராஜாவானாலும் பொருந்தாத காதால் மனம் இணையாது
ஊருக்கு உபதேசம்போல் அவன் காதில் வாங்கவில்லை மாறாக
சோர்வுடன் இருக்கும் மணிமேகலை பளிக்கறையில் கண்டான்.



...தொடரும்

கவிஞர் ந. திருக்கோமு

# மழை

வான்மேகம் கதவடைக்க
கார்மேகம் புடை சூழ
காலநிலை மாற்றமடைய
குளிரும் கொஞ்சம் தூது சொல்லும்
வானமழை வரபோவதை

மாரி மழை மனதை நனைக்கும்
மாசுதூசு மழையில் அழியும்
இலையும் கொஞ்சம் முகப்பரு காணும்
மணலும் மெதுவாய் இடை நகரும்



பசுமை எல்லாம் படர்ந்து இருக்கும்
பனிக்கட்டி வந்து பருவம் நனைக்கும்
குடைபிடிக்க என்னி கரமும் நினைக்கும்
மறதியால் மனமும் ஏங்கும்
மணல் வாசனையில் மனமும் மயங்கும்

வானவில்லும் வந்து மறையும்
வரம்பை மீறி வெள்ளம் பாயும்
வசதியான வீடும் வாய்க்காலில் செல்லும்
வறுமையும் பெருகி போகும்

அளவான மழை ஆனந்தமே
அதிகளவு மழை ஆபத்தானதே
அனணகட்டவது அறிவின் செயலே
அதை மீறுவது இயற்கையின் செயலே

கவிஞர் பரிமளா மணி, இலங்கை

# நீ எங்கே நான் இங்கே

முத்தொன்று வரைந்தேன் நெஞ்சத்தோடு பதிந்தேன்
விட்டு விட முடியாது தட்டிவிட தெரியாது
நிலையில்லாது அல்லாடினேன்

தவித்து போனதும் தாகித்த போது ஏனோ நிலையில்லா ஏமாற்றம்
ஆசைகள் பல இருந்தும் விருப்பங்கள் கடல் அளவிலானாலும்
சொல்லிக்கொள்ள முடிவதில்லை

சூழ்நிலைக் கைதியாகி நான் நிற்கிறேன்
வியாபாரமில்லையே எண்ணவோட்டத்திற்கு லாபம் நஷ்டமேது
அளவில்லா ஆசை இல்ல குறையில்லா தோஷமில்லையே
ஏனிந்த அவலமோ அலறிக்கொள்ள வேண்டுமோ

நேசிக்க வேண்டுமென்ற கனவொன்று நேசமெல்லாம் நெஞ்சோடு
வேலிப்போட்டு காக்கிறது ஆசைகளுடன் விருப்பும்
வெறுப்பாகி போனாயோ நெருப்பாகிச் சுடுவாயோ
திருப்பத்தை தேடுகிறேன் தேடல் நீளுதே தவிர
வரவென்றதைக் காணுமே

காயமாகி போனதாலோ காதல் தூரமாகிப் போனதோ
வேர்த்து விருவிருக்க வேண்டுமோ உணர்வுகள்
தெவிட்டாத அன்பை அள்ளித்தெளிக்க நானிருக்க நீ எங்க எனன்பே
போலி வேஷமில்லை என்னிலே ஏன் இன்னும் மாற்றமில்லை உன்னிலே

வந்து விடுவாய் விடுதலை தந்து விடுவாய் என்றே கடந்துப்போனாலும்
ஏமாற்றமே மிச்சமென்றாகி எச்சமிட்டு மிச்சம் வைக்கும்
அந்த வானத்தூரம் போல நீயும் நானுமே தூரமாகினோமே
வானத்து நிலவாய் நானும் மதியாகி உன்னை தொடரவே



பொக்கிஷத்தைப்போல காத்தாலும் நீ ஏனுமில்லை
வரவாய் வந்து விடேன் தரவாக தந்து விடவா
வல்ல இறையோனை நாடியே நாள் பொழுதும் முடிகிறதே!
வசந்த காற்றாய் துளிரும் மரச்செடியாய்
நீயும் நானுமாகிட வேண்டுமே

இருவிழிகளின் ஓர்ப்பார்வையாய்போல இதயத்தைப்போல
வாழவேண்டும் ஈமான் சூடி இறைவனை நாடி
தேடி வருபவையில் உறுதியற்றுக் கிடக்க
நீ யோஎன்று நான் எவ்வாறு நினைக்க

கவிஞர் சஹீனாஸ் பேகம், புத்தளம்(இலங்கை)

# அவனோடு ஒரு வாழ்க்கை

ஆலமரத்தில் ஒரு வீடு அசைந்து ஆடு ஆலம் விழுது
செழிப்பான வயல்கள் ஒரு பக்கம்
வற்றாத நீரோடும் நீர்வீழ்ச்சி மறுபக்கம்

ஓய்வே இல்லாமல் ஓசை தரும்
குருவிகளின் ஓசைகள் இசையட்டும்

வீதி இல்லா ஒற்றையடி பாதை
அவனுக்கும் எனக்கும் மட்டும்

விறகு உடைத்து மண்பானையில் சோறு சமைத்து
மரநிழலில் விருந்து உண்டு பின்பு
காற்று தலை கோத தண்ணீரின் இசையோடு ஒரு தூக்கம்



இரவாநாள் நிலவு ஒளி தர வந்துவிடும்
இல்லை என்றால் என் வீட்டு ஒற்றை விளக்குக்கு
ஒளி சேர்க்க மின்மினி பூச்சிகளும் வந்துவிடும்

யாருமில்லா அந்த உலகில் நானும் அவனும்
காதல் கொண்டு காமம் கொண்டு
இயற்கையை வென்று வாழும் வாழ்க்கை
இது யாருக்கும் கிடைக்காத வாழ்க்கை

கொஞ்சம் அந்த வாழ்க்கையை நினைத்துப் பாருங்கள்
இணைக்கும் போதே இன்பம் துளி விட ஆரம்பித்து விடும்.

கவிஞர் சாதீக் பாத்திமா சுமீஹா, மூதூர் (இலங்கை)

# வாக்குறுதி



குருதி சிந்தி உழைத்தால்
குடும்பம் நடத்திடலாம்
நம்ம முடியாதது வாக்குறுதி!

நடக்காது முடியாது சொல்லின்
இலக்கண மொழி தற்போதைய
வாக்குறுதி!



உறுதி இல்லாத நாக்கு
உதிர்க்கும் சொற்கள்
வாக்குறுதி!

அழுகின்ற குழந்தைக்கு சமாதானம்
கொதிக்கின்ற மக்களுக்கு குளிர்காய
தற்காலிக நடவடிக்கை வாக்குறுதி!

வக்கெடுத்தவன் சொல்லெல்லாம்
வழக்காட முடியாத
வாக்குறுதிகள்!

கதி அற்றவர்க்கு வழங்குகின்ற
இலவச நிவாரணம்
வாக்குறுதி!

கவிஞர் திருமதி மோ. கோமளாநேதாஜி

# விடை அறியா தேடல்


தேடி தேடி வாழ்க்கை தேடலானது
இரு கண்களும் அவளை பார்த்தன
அவளும் புன்னகைச் செய்தாள் என்னோடு
அவளுக்காக எழுதிய கடிதங்கள் ஏராளம்
அவளது கையில் கொண்டு சேர்க்க
மனம் ஏதோ தடுமாறுகிறது இதயம்
மட்டுமே துடிக்கிறது நாளுக்கு நாள்
தேடல் அதிகமாகி முகவரியை தேடினேன்
தேடினாலும் கிடைக்காத பொக்கிஷமாய் ஆனது
முகமூடித் திரையில் கண்கள் மட்டுமே
வந்து அடிக்கடி ஞாபகப் படுத்திட
ஏக்கங்கள் என் ஆழ்மனதில் வருத்தத்தோடு
எனக்காக பிறந்தவள் எனக்கு கிடைப்பாள்
என்ற நம்பிக்கையில் நாட்களும் ஓடின
கற்பனையில் வாழ்ந்தாலும் விடையறியா
தேடலாய் தேடிச் செல்கிறேன் நினைவுகளோடு



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# நேசப்பிணி

உன்னில் இருந்து
என்னைப் பீடித்துக்கொண்டதா
என்னிலிருந்து உனக்குத்
தொற்றி விட்டதா
நீடித்துக் கொண்டே இருக்கிறது
உனக்குள்ளும்
எனக்குள்ளும்
நேசப்பிணி...
நம்மிருதயங்களையது
பலப்படுத்திக்கொண்டே
பாலமமைக்கிறது!
பூங்கொத்துக்கள் தேவையில்லை
வானில் சிதறிக்கிடக்கும்
உன் நட்சத்திரப்புன்னகைகளில்
ஒன்றிரண்டைத் தூதனுப்பு
கொஞ்சம் மினுக்கிக் கொள்கிறேன்
என் ஆன்மாவை!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

தடுமாற்றம் என்பது
தள்ளாமையின் வெளிப்பாடு
மனமாற்றம் என்பது
தாளாண்மையின் புறப்பாடு.

வெற்றியும் தோல்வியும்
மனிதனை அளவிடும்
தள்ளான்மையும் தாளாண்மையும்
மனிதத்தை வெளிப்படுத்தும்.

சோம்பித் திரிபவன்
வீணாகப் போகிறான்
வீராப்பாய் வாழ்பவன்
வெற்றிகளை அடைகிறான்.



அன்பாய் இருந்தால்
அனைத்தும் பெறலாம்
அரவனைத்துச் சென்றால்
அகிலமும் ஆளலாம்.

ஆண்மை என்பது
அடையாளமும் அல்ல
பெண்மை என்பது
அடிமையும் அல்ல.

கவிஞர் செங்குட்டுவன், ஊத்தங்கரை

# தோல்வியும் வெற்றியே

தோல்வி என்ற ஒன்றில்லை
துவக்கம் மட்டுமே நிஜம்!

தோல்வி என்ற ஒன்றில்லை
படிப்பினை மட்டுமே நிஜம்

தோல்வி என்ற ஒன்றில்லை
கற்றல் மட்டுமே நிஜம்

தோல்வி என்ற விதை பாராமல்
வெற்றி எனும் விருட்சம் அடைய முடியாதே!

தோல்வி என்ற
முதல் எழுத்தைப்பாராமல் ,
முழு எழுத்தையும்
சுவைத்திட முடியாதே.



தோல்வி என்ற ஒன்றைச் சந்தித்ததும்
களைப்படைந்து விடாமல்
கற்றலையும்,
கவனத்தையும் கூட்டி,
கண்ணுக்கெட்டும் தூர
வெற்றியை
ஆரத்தழுவுவோமே.

கவிஞர் பானு அப்துல்லா

# வாக்குப்பெட்டி

ஒவ்வொரு தேர்தலிலும்
தேடப்பட்டு
உங்களிடம் சேருகிறோம்
எங்களுக்குள் விழுந்த
ரகசியங்களை
நீங்கள் உடைக்கும் வரை
உலகமே உற்றுப் பார்க்கும்
எங்களால்
கோபுரம் ஏறியவர்களும் உண்டு
குப்புற விழுந்தவர்களும் உண்டு.
ஆனால் ஒருபோதும்
ஜெயித்ததில்லை நாங்கள்




கவிஞர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்

# துளிப்பாக்கள்

குளிரின் அமைதியான காவலர்கள்
இயற்கையின் அமைதியைக் கூட்டுகின்றன
பனி மூடிய சிகரங்கள்

அசையும் பைன் மரங்கள்
குளிருக்குப் பழகிய காதுகளில் ரீங்காரிக்கும்
மரங்கொத்திகளின் கொத்தல்

அலறும் பனிக்காற்று
ஆழமான பள்ளத்தாக்குகளில் எதிரொலிக்கிறது
குளிர்காலத்தின் ஓசை

கம்பீரமான மலைகள்
இயற்கையை காதலிக்க தூண்டும்
குளிரின் பச்சை

நகரும் மேகங்கள்
கட்டிப் பிடிக்க ஓடும்
குழந்தை மனம்




கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

# அமைதியின் வலிமை

அமைதியாக இருப்பவர்கள்
முட்டாள்கள் என்றும்
நன்றாக பேசுபவர்கள் புத்திசாலிகள்
என்றும் நினைத்து விடாதே
ஆழிப்பேரலை சுனாமியாக மாறுவதற்கு முன்
அமைதியாகத்தான் இருக்கும்.



கவிஞர் அகீலா ஜவுபர், ஏத்தாளை புத்தளம் (இலங்கை)

# தாய்மை



ஒன்பது மாதங்கள் கடந்த பின்பு
என் வயிற்றில் வந்தூதித்து.
என் தாய்மைக்கு
அர்த்தம் தந்த எனது நட்சத்திரமே.
வாந்தியும், மயக்கமும், தூயிலும்
உடல் சோர்வும் இருந்த போதிலும்
மலடி என்ற பட்டத்தை உடைத்து
எரிந்து முத்தாக உருவாகிய தங்க ரதமே.
நான் உன்னால் பெற்ற இன்பமோ பல
எத்தனையோ பட்டம் பெற்ற போதிலும்
நீ எனக்கு தந்த பட்டமே வாழ்வில் எனக்கு
தலைசிறந்த பட்டம்! தாய்மை !
வட்ட முகம் கொண்ட என் வெண்நிலாவே
என் வாழ்வில் ஒளி தந்ததேனோ
என் தாய்மை உன்னை தொடுவதற்கும்
உன்னை அள்ளி அணைக்கவும் காத்திருக்கும் தாய்மை.

தற்போது வலம் வருகிறாள் என் தங்கையாக.

கவிஞர் டிரோன் மஹேஸி

# கவனமாய் இருந்திடு பாப்பா

கன்னத்தில் முத்தமிடுபவனையும்
கடித்து குதறிவிட்டு
கவனமாய் இருந்திடு பாப்பா!
கால்களால் உரசுபவனையும்
காரி உமிழ்ந்துவிட்டு
கவனமாக இருந்திடு பாப்பா !

கிள்ளி நகையாடும் கிழவனையும்
கிழித்து எறிந்துவிட்டு
கவனமாய் இருந்திடு பாப்பா !
கீணம் செய்பவரையும்
கீழப்பிடித்து தள்ளிவிட்டு
கவனமாய் இருந்திடு பாப்பா!

குறுகுறு பார்வை பார்ப்பவனையும்
குத்திக் கிழித்து விட்டு
கவனமாய் இருந்திடு பாப்பா!
கூட்டத்திற்கு கூசச்செய்வோரையும்
கூக்குரலிட்டு காட்டிக் கொடுத்துவிட்டு
கவனமாய் இருந்திடு பாப்பா!

கைம்பெண் என்று பாராமல்
கை இழுப்பவரையும் கையை ஒடித்து விட்டு
கவனமாய் இருந்திடு பாப்பா!
கொடுமை செய்யும் கொடும்பாவிகளையும்
கொன்று புதைத்துவிட்டு
கவனமாய் இருந்திடு பாப்பா!

கோவில் என்று பாராமல்
கோத நினைப்பவரையும் கோல் கொண்டு அடித்திட்டு
கவனமாய் இருந்திடு பாப்பா!

கௌரிப்பெண் நீயும் கௌரவமாய் வாழ்ந்திடவே
பல நேரங்களில் கவனமாக இருந்திடு பாப்பா!
பட்டப்பகலிலுமே பல்லிளிப்போரிடமும்,
பாவிப்பெண்ணையும் பாழ்படுத்துபவரிடமும்,
பிடிக்காதவளையும் பிடிவாதப்படுத்துபவரிடமும்,
பீதி செய்பவனையும் வீதியில் நிறுத்திடு பாப்பா!

புழக்கடை வழியே புகும் நாய்களிடமும்,
பூ போன்ற பெண்உனையும் பறித்து கசக்க நினைப்போரிடமும்,
பெம்மான் தூரிகையிடும் பெருந்திருடனிடமும்,
பேச்சிலே பேதலிக்கவைப்பவனையிடமும்,
பைமை போலவே கவனமாய் இருந்திடு பாப்பா,
பொசிக்க நினைப்பவனையும் பொதியல் ஏற்றிட்டு,
போலியாக நடித்திட்டே போழ் செய்பவனையும்,
பௌர்ணமி மதியாய் பிரகாசித்திடவே
பௌதிக வாழ்வினிலே கவனமாய் இருந்திடு பாப்பா!



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# நட்பே!

அன்பெனும் பிணைப்பில் எதிர்பாராமல் இணைந்து
நட்பெனும் அழகிய பயணத்தில்
அளவில்லா அன்பை எனக்களித்தவள் நீ!

ஆசையாய் எனை அணைத்து
அன்னைக்கு நிகராய் அன்பூட்டியவள் நீ!

இன்றும் என்றுமாய் ஈடில்லா இன்பத்தை
எனக்களிப்பவள் நீ!

உள்ளம் மகிழ நாம் சேர்ந்திருந்த
காலமோ ஈராண்டு!

காலம் ஈராண்டாயினும்
அக்காலத்தில் சேகரித்த
நினைவுகளோ ஏராளம்!

காலம் கடந்து பிரிவு எனும்
பேரிருள் நம்மை சூழ்ந்து வரினும்
ரகசியம் என்ற ஒன்று மட்டும்
இதுவரையில் ஏன் நம் இறுதி வரையில்
இருக்கப்போவதில்லை !



நினைவினைத் தாண்டிய
நிகழ்வுகளெல்லாம் நம் வாழ்வில் நடப்பினும்
எதையும் தாங்கி நிற்கும் தஞ்சையைப் போல்
காலம் கடந்தும் நீடித்து வருவது
நஞ்சில்லா நம் நட்பு!

இனியும் வார்த்தை பல தேடி
தோற்று நிற்கிறேன் அன்பே!

உன் ஈடற்ற அப்பழுக்கற்ற அன்பிற்கு முன்னால்
ஏதும் உண்டோ!

கவிஞர் ஜோ. மஞ்சு, மருங்கூர்


# நானும் நட்பும்

பள்ளி நாட்களின் பசுமை தோழன்
கள்ளிகாடு சுற்றும் கவலையில்லா வேலன்
ஆடு,மாடு மேய்ப்போம் ஆயர்பாடி கண்ணனாய்
பாடும் கவிதையோ பாவினத்தின் புதினம்

கல்லூரி பருவம் கடமை ஏது?
காதல் மோகம் கன்னியை தேடுது
படிப்பும் வேலையும் பாதிபாதி நேரமாய்
செடியாய் முளைத்து மரமாய் வளர்கிறோம்

உதவி செய்திட உறவுகள் இல்லை
பதற்றமான நிமிடத்தில் பாதாளம் காண்கிறோம்
ஏழ்மை சூழ்கிறது எங்கள் வாழ்விலும்
வாழ்வும் வறுமை வண்ணமாவது எப்போ?


தொழிலும் செய்தோம் தோல்வியே நாளும்
விழிப்புடன் செயலாற்ற வெற்றியும் எங்களுக்கு
கண்ணன் நட்பில் காட்சியாய் இருவரும்
கர்ணன் அன்பில் கண்ணிமையும் நாங்கள்



கவிஞர் ஈ. தீவணிதன், பல்லடம்

# சிலப்பதிகாரம்

தமிழில் தோன்றிய முதல் பெருங் காப்பியம்;
முதலாய் போன முதன்மை தொரு காப்பியம்;
இயலுடன் இசைத்து கூத்துக் கட்டிய காப்பியம்;
முந்நாடு போற்றும் மூத்த முத்தமிழ் காப்பியம்;
தமிழ் மரபை அடி தழுவி தோன்றிய காப்பியம்;
தொல்காப்பியத்தின் தொன்றுத் தொட்ட காப்பியம்;
சங்க தேவார கால இடை அமைத்த காப்பியம்;
வையம் அறம் போற்றும் குடிமக்கள் காப்பியம்;
இமயமாய் தமிழில் உயர்ந்து நிற்கும் காவியம்;
மனிதம் தனை தெய்வமாக்கி பார்க்கும் காப்பியம்;
இளங் கோவடிகளின் நோக்கம் முடித்த காப்பியம்;
நன்னூல் முதற்நூற்கு உண்மை சேர்க்கும் காப்பியம்;
குன்றக்குறவர் கண்ட காட்சியில் தோன்றிய காப்பியம்;
குடிமகன் தன்னை தலைவனாய் பார்க்கும் காப்பியம்;
கோவலனின் குணங்களை காட்டிய காதல் காப்பியம்;
கண்ணகியின் கற்பை பறைசாற்றிய நெறிக் காப்பியம்;
மாதவியின் மாண்பை மடைக் திறந்த காப்பியம்;
சிலம்பில் அதிகாரத்தின் ஆணவம் உடைக்த காப்பியம்;
வாழும் நெறிமுறைகளை கற்றுத்தந்த காப்பியம்;
சிலப்பதிகாரம் எனும் எங்கள் சிந்தைக் காப்பியம்.




கவிஞர் ஆனந்த் குவை. ஜெயராமன், சேத்தியாத்தோப்பு

# விழிக்காட்டில் விழவா

கும்மிருட்டுக்குள்
அடைபட்டிருக்கும்
எனது ஆண்மையின்
விழிகளுகளுக்குள்
சிறு மயிலிறகை விரித்தாடி
விதைத்துவிட்டாய் காதலின்
சிறு விட்டில் ஒளியை.



மரம் மரமாய்
ஒளிந்து மறைந்து
வெளிச்சம் தேடிய
எனது இரவுகளுக்கு
சிறு சிமிட்டல் விழிகளுக்கு
புருவம் வரைந்து
சருக்குமரமாய்
எனது இருளை
விளையாட செய்தாய்.

நேற்று உதிர்ந்த இலைகளின்
உதிர்வுகளில் உனது இதழில்
எச்சில் நிரம்பிய இறந்தகாலம்
இருப்பினும் வெடிப்புகளில்
மிஞ்சியுள்ளது
நான் விட்டுவைத்த
விழிக்காட்டில் பருகிய
இருள் தேன் சுவை.

எழுந்து
மீண்டும் விழவா
உன் விழிக்காட்டில்
காதல் தீப்பந்தம் ஏற்றிய
மோகத்தீயின் நுனியில்
உன் சிறு முத்த அனலாய்.

கவிஞர் சே கார்கவி கார்த்திக், நாகப்பட்டினம்

# மணக்கட்டும் மாணவர் வாயும் இனியேனும்

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வ மிதையடியேன்
சிறுவயது முதலே அறிவேன் ஆயினும்
சிறப்பாய் யானறிந்த சிலவற்றை அறியாப்பிறர்க்கு
சிலநேரம் அறிவிக்கப் பேசுவதுமுண் டதனால்நீவிர்
சொல்லாதீர் இனியும் அதிகப்பிரசங்கி யானென்று!

வாழும்வழி சொன்ன வள்ளுவனார் சொன்னவற்றுள்
வாழ்கிறதொரு திருக்குறள் அடியேனிதயத் திலின்றுமது
உரைக்கும் பொருளை யானுரைத்தாலதை நீங்கள்
தவறென்றே மீளவுரைக்கா செவிமடுக்க வேண்டுவேன்!




தாம்கற்ற ஒன்றை பிறரறியும் வண்ணம் எடுத்துரைக்காதார்
மணமற்ற மலரென்றுரைக்கு மதனாலடியேன் மணமுள்ள
மலராயிருக்க விரும்பி சொன்னதையே திரும்பத்திரும்ப
சொல்லுகிறேன் என்பதோடு அதைபுரியார் புரியும்வரை
மீளச்சொல்வே னதைநீவீர் புலம்பலென்று மீண்டும்மீண்டும்
சொல்வீரென்றால் சொல்லிப் போவீர் போவீரே!

அறப்பணியாம் ஆசிரியப் பணியில் உள்ளவனால்
அரைத்த மாவையே திரும்பத் திரும்ப
அரைக்கா மலிருக்க ஆனமட்டும் முயன்றும்
ஆகாது போனதாலரைக்கின் றேனின்றுமெந்தன் வாயாலே!

வாய்ப்பூட்டுச் சட்டம்கல்வித் துறைவாத்திக்குப் போட்டுவிட்டு
வாய்ப்பளியுங்கள் மாணவர்க்கு; அவரைப்பேச வைத்துகேட்க
என்று ஆண்டாண்டாய்த் தற்காலமிதில் பயிற்சியளித்து
எம்மையெம் பள்ளிக்கனுப்பி வைத்தால்பேசிய வாயடங்கலையே!

கேட்டுக்கேட்டு ஆசிரியர்கள் பேசக்கேட்டு பழகியமாணவக்
கண்மணிகள் பேசவும் மறுக்கின்றனரா சிரியரிடத்தில்;
கேட்கவும் மறுக்கின்றனர் ஆசிரியர் சொல்வதையே;
அதனாலின்றும் கற்றல் கற்பித்தல் இருவழியாய்
அமையாதொரு வழிப்பயணமாய் ஆசான்வாயே தனியாய்மணக்கிறது;
இனியேனும் மாணவர் வாய்களும் மணக்குமா
இல்லைமௌனந் தானவர்மொழியா, யாரதை அறிவார்?

குறள் 650:

இணருழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார்.

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# போகிறேன் போகிறேன்

போகிறேன் நான் போகிறேன்

போகிறேன் வெகுதூரம்
போகிறேன்.
தொலைவாய் போன
நினைவிலே
தொடரும் பயணம்
கனவிலே.

போகிறேன் நான் போகிறேன்

வினையேதுமில்லை
விளைவும்.புரியவில்லை.



கேளிக்கை மனங்களிலே
கேள்வியும் எனக்கு இல்லை

வேடிக்கை மனிதர்களில்
வேடமும் எனக்கு இல்லை

சொல்லி தெரிய ஏதுமில்லை
சொல்லாமல் விலகவும்
விலக்கு இல்லை

போகிறேன் நான் போகிறேன்

கனவு தேடி போகிறேன்
கற்பனையில் வாழ்கிறேன்

நிழலை தேடி அலைகிறேன்
நிசத்தை மட்டும் வெறுக்கிறேன்

போகிறேன் நான் போகிறேன்

தெளிவில்லாமல் போகிறேன்
தெளிந்தும் தொலைந்து போகிறேன்

போகிறேன் நான் போகிறேன்.

கவிஞர் வ. சு. கலைவாணி, நெய்வேலி

# வார்த்தை



எழுத்துகளின் சங்கமம்
வார்த்தை
ஓரெழுத்திலும் உருவாகும்
வார்த்தை
எத்தனை சக்தியானது?
பலநேரங்களில் வலிமை
சில நேரங்களில் வலியும்
உறவுகளில் உழல்பவருக்கு
உதாசீனமான வார்த்தை
உயிர்உருவும் வலி தருமே
உதிர்க்கும் வார்த்தைகள்
உருவாக்கிடவும் செய்திடும்
உருக்குலையவும் வைத்திடும்
எல்லாமே குடும்பமென
வாழ்ந்தவரிடம் சொல்லும்
என்ன செய்தாய் எங்களுக்கு?
எனும் ஒற்றை வார்த்தை
உயிருடன் எரித்திடுமே.
வில்லம்பை எடுத்திடலாம்
சொல்லம்பை?

கவிஞர் ஷீலாதேவி அருணாசலம், நாகர்கோவில்

# தண்ணீரும் தமிழும்




தண்ணீரும் தேன் தமிழும் ஒன்றாகும்
பண்நீரும் தண்நீரும் கண் உண்டாகும்

மல்லிகை சூடும் மங்கை நீர்த்துளி
சொல்லிடை ஆடும் செந்தமிழ் வளி

பயிர் காத்து பலவும் தந்தாய்
உயிர் காத்து மெய்யும் உவந்தாய்

சிந்தும் துளி ஜன்மம் காக்கும்
செந்தமிழ் மொழி மென்மை ஆக்கும்

நா நனைக்கும் தண்ணீர் ஆனாய்
பா பிறக்கும் மண்ணிலே பாராய்

ஐம்பூதங்களில் உலவுமே அமிழ்தாகிய அப்பு
ஐம்காப்பியங்களும் நிலவும் தமிழிலே செப்பு

நீராகி எங்கள் தாகம் தீர்த்தனை
காராகி எங்கும் கவிமேக கீர்த்தனை

ஆற்றுநீரால் ஊற்று நீரால் ஊரை ஊற்றினை
போற்றினை ஆற்றுபடுத்தி பாரை தேற்றினை

கவிஞர் மதீரா அறிவிப்பாளினி, இலங்கை

# இல்-இடர்-இயல்பு

விழுங்கிய சொற்கள்
விழிக்குள் கசங்கி
விழுந்த இடமெங்கும்
விளைந்து கிடக்குது

உப்பிட்ட பொழுதெல்லாம்
உள்ளவரை நினைக்குமென
எண்ணியே ஒருபிடி கூடிப் போனது

காலத்திற்கும் உடன்வருமென
எண்ணியதெ தன்பிசகோ
வாசலுடன் கழற்றிய ஏதோவானது!



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# காதல் ஆசையும் காதல் தவிப்பும்

வெண்ணிலவின் ஒளியில்
வெளிச்சமான முகம்
விண்ணகத் தேவதையும்
வந்து இறங்கினாளோ
மண்மீது உலாவந்து
மனதைப் பறித்தாளோ
எண்ணத்தில் கலந்தவள்
என்னை ஏகாந்தமாக்கினள்



அன்னவளை கண்டே
என்காதல் செப்பிட
என்னவள் நீயென
ஏகவுரிமையை நாட்டிட
காரிகையாள் வருகைக்கு
காதலோடு காத்திருக்கிறேன்
கண்ணிரண்டும் அவளைக்
காணத் தவித்திருக்கிறது

காதல் ஆசையை
களிப்போடு இயம்பிட
காதலியும் ஏற்பாளோ
கழித்து விடுவாளோ
காதலின் தவிப்பை
கன்னியவள் உணர்வாளோ
காதலே தீர்மானிக்கட்டும்
காதலோடு காத்திருப்பேன்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு


# ஹைக்கூ

மிதிவண்டியில் புற்கட்டு
களைப்போடு திரும்பும் உழவன்
வழியில் ஓடையிறக்கம்



கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், துபாய்

# எனது இதயத்தின் உயிர் துடிப்பு நீ



நான் காணும்
காட்சிகளின்
பிம்பம் நீ !

எனது
உரையாடல்களின்
சொற்கள் நீ !

நான் நடக்கும்
பாதைகளின்
திசைகள் நீ !

எனது
கனவுகளின்
நாயகன் நீ !

நான் முனகும்
பாடல்களின்
வரிகள் நீ !

எனது நாசிகள்
தொட்டுச் செல்லும்
சுவாசம் நீ !

எனது இதயத்தின்
உயிர் துடிப்பு
நீ !

நான் நேசித்திடும்
எனது உயிர்
நீ !

கவிஞர் ஜனனி குமார், நாகப்பட்டினம்

# மீண்டும் வா பாரதியே

முறுக்கிய மீசையும் முண்டாசயே கிரீடமாய் கொண்டு
தேச பார்வையும் தெய்வீக உள்ளமும் கொண்டு
பகைக்கு அஞ்சா வணங்காமுடியே
உன் சொல் கேளாமல்
ஓடி விளையாடாத பாப்பாக்கள் எல்லாம்
இன்று தாத்தாக்கலாய் நடை பயிற்சி செய்வதும்
கூடி விளையாடாத குழந்தைகள் எல்லாம்
இந்த 21ஆம் நூற்றாண்டில்
கைபேசியில் தலைகுனிந்து கிடப்பதும்
படிப்பும் பாட்டும் மறந்து
இன்று சோம்பேறியாய் வக்கற்று திக்கற்று
போதைக்கு அடிமையாகி பூமிக்கு பாரமாய்
பெற்றவர்களுக்கு தூரமாய்
சமூகத்துக்கு அந்நியமாய்
வாழும் அவலம் என்று தீருமோ?
சுட்டெரிக்கும் தீ பார்வையுடன் சமூக அவலத்தையும்
பெண் அடிமையையும் பாடி தீர்த்த கவி ராஜனே
பகைக்கு அஞ்சா வீரம் கொண்ட பாரதியே
பராசக்தியிடமே காணி நிலங்கெட்ட பக்தியின் உச்சமே
எங்கள் பாரதியே மீண்டும் ஒரு முறை நீ வரவேண்டும்
முடை நாற்றம் எடுத்த சமூக அவலத்தை தோலுரிக்கவும்
உறுதி கொண்ட நெஞ்சம் படைத்த
இளைஞனையும் சமூக மாற்றத்தையும்
உன் பட்டறையில்தான் பட்டை தீட்ட முடியும்
மீண்டும் வா பாரதியே!



கவிஞர் ஜேபி. பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# மோகராகம்

மலைக்கூந்தல்
வானம் முட்டி பார்க்குது
காற்றும் பேசுது
பச்சை சிணுங்கி பார்க்குது
வாழ்த்து பாட போகலாம்
வண்ணம் காணலாம்

இசை கோலம்
மலரும் ராகம்
கனியும் காதல்
கவிதை தீட்டும்
மோகராகம் மீட்டுதே



தலையசைக்க வருவாயோ
தந்தானான சொல்லி தருவாயோ
மேகப்பொதியும் பேசுது
மெல்லிய தாளம் பாடுது
இலையும் இசைந்து ஆடுது

காற்றின் கூற்றிலே கவலை
மறக்குதே
கட்டிவைத்த சுமைகள் எல்லாம்
பறந்து போகுதே
வாழ்த்து பாட போகலாம்
வணங்கி மனதில் தேக்கலாம்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி

# எழுத்துப்பிழை

பிழை ஒன்றை பதித்தே
எழுத்துப்பிழை என்றே வாதிடும்.

பொய்யான முகத்திரையை
கிழித்தெறியும்
இந்த மெய்யான எழுத்தப்பிழை.

ஒற்றை எழுத்து பிழையானால்
எழுத்துப்பிழையா?
எழுதும் விரல் பிழையா?
காணும் கண்கள் பிழையா?
புரிந்து கொள்ளும் மனம் பிழையா?

ஓர் எழுத்து தவறி உரைத்த
அரசனும் நீதியை மறந்து
நெறி தவறி மனமுடைந்து
உயிர் நீத்தார்.

## எழுத்துப்பிழை

மன்னிப்பு அடுத்த தவறுக்கான
முதல்படி.
உண்மையை உணர்ந்து
மனதில் நிறுத்தி பிழையும் திருத்து.

பாவம் ஒரு பக்கம்;
பழி ஒரு பக்கம்

இந்த எழுத்துப்பிழைக்கு எந்த பக்கம்?

கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# வண்ணங்களும் கவிதை தினமும்

ஒவ்வொரு பொருளும் ஒன்றைச் சார்ந்ததே!
அக்கால கவிதைகள் மரபுக் கவிதைகளே!
இலக்கணமும் இலக்கியமும் நிறைந்ததே!
மகாகவி பாரதியாரின் கவிதைகள்
சிறாரும் புரிந்து கொள்ள நடைமுறை கவிதைகளே!
கம்பனின் பத்தாயிரம் பாடல்கள் சடையப்ப வள்ளலின் ஆதரவே!
ஸ்ரீரங்கத்தில் அரங்கேறியது.
எண்ணங்கள் போல் வாழ்க்கை.
வண்ணங்களும் நம் மனதை பிரதிபலிக்கும்
ஒரு தத்துவமே! நம் மனதின் ஊடே ஓடும்
எண்ணங்களே கவிதையாகி
பலரையும் பரவசப்படுத்தும் நற்சான்று.
வண்ணங்களில் பசுமை நிறம்
நம் நாட்டின் பசுமை நிறைந்த விவசாயமே!
செம்மை நிறம் பார்க்க பார்க்க
அழகை தூண்டச் செய்யுமே! வெண்மை
நிறம் அமைதிக்கான அன்பு நிறைந்தது.
அதி அற்புதம் நிறைந்த கலவையே! கருப்புதான் அழகு.
ஏனெனில் தாயின் கருவறை
நாம் குடியிருந்த கோயில் அல்லவா?
என்னையும் இன்றைய நாளில்
கவிஞர்கள் தினமான அகர முதல இலக்கிய பேரவைக்கு
மனமார்ந்த நன்றிகளும் வணக்கங்களும்.

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# மகளுக்காக

கண்ணே கனியமுதே
நான் கண்ட அற்புதமே!

மணியே மாசில்லா மாணிக்கமே
நான் காணும் மதியழகே

விழிகளில் நிறைந்து நின்று
விந்தைதனை பொழிபவளே

அசட்டுச் சிரிப்பில்
அமுதூட்டி மகிழ்பவளே

சிறு புன்னகையில் எனக்கோர்
புதையலாய் வந்தவளே


நடை பயிலையில்
நர்த்தனமாடிய நந்தவனமே

பொய்க் கோபம் கொண்டு
போதுமெனும் அன்பைத் தருபவளே

அன்பெனும் மந்திரத்தில்
ஆகாயத்தினும் உயர்ந்தவளே

கண்ணே கனியமுதே
எனதன்பு மகளே

நீ நினைத்திடும் நன்மைகள் யாவும்
ஈடேற வாழ்த்துகிறேன் உன் அன்னையுமே!




கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# கவிதைக்காய் ஓர் கவிதை



பூவின் அரும்பிலும்
அரும்பின் நுனியிலும்
அதன்மேல் மொட்டிலும்
வாடியிறந்த சருகிலும்
மலையின் வளைவிலும்
நதியின் நெளிவிலும்
நீரின் தெளிவிலும்
நீ மெல்ல நுழைகிறாய்!

விழிகளில் தாளமிட்டு
வரிகளில் கோலமிட்டு
இதயத்தில் ஊற்றெடுத்து
இரத்த நாளங்களில்
குருதியாய் சுருதி சேர்த்து
நீ மெல்ல நுழைகிறாய்!

முன்றில் மண்ணிலும்
முளைக்கும் வேரிலும்
துளிர்த்த இலையிலும்
தளிரின் நிறத்திலும்
வானின் முகிலிலும்
நீந்தும் நிலவிலும்
நீலம் படர்ந்த வானிலும்
சாகசங்கள் பலபுரிந்து
நீ மெல்ல நுழைகிறாய்!

விழிகளில் தாளமிட்டு
வரிகளில் கோலமிட்டு
இதயத்தில் ஊற்றெடுத்து
இரத்த நாளங்களில்
குருதியாய் சுருதி சேர்த்து
நீ மெல்ல நுழைகிறாய்!

நாளின் விடியலிலும்
நாழிகை நகர்வுகளிலும்
நின் பார்வைகளிலும்
நிஜக்கனாக்களிலும்
நீண்ட பாதைகளிலும்
பகலின் ஓரத்திலும்
நிலவின் சயனத்திலும்
பார்வைத்தொடுகையிலும்
கருவிழிக் குவியலிலும்
நீ மெல்ல நுழைகிறாய்!

விழிகளில் தாளமிட்டு
வரிகளில் கோலமிட்டு
இதயத்தில் ஊற்றெடுத்து
இரத்த நாளங்களில்
குருதியாய் சுருதி சேர்த்து
நீ மெல்ல நுழைகிறாய்!

கவிஞர் செண்பகச்சோலையாள் ஆய்ஷா

# மாலவனும் வைணவமும் பகுதி 26

## பெரியாழ்வார் (தொடர்ச்சி-9)

பெரியாழ்வார் நான்காம் பத்தைந்தாவது திருமொழியில்
பகவானிடம் ஈடுபடா தோர்க்குபதே சம்பத்தின்
எண்சீர்கழி நெடிலடியில் ஆசிரிய விருத்தமாக
'கண்டா'பேர் ராகத்தில் ஆதிதாள இணைப்பதனில்
பாத்தொகுப்பு அருட்பொழிவு மாலருளே கூட்டிடுமே!
ஆறாவது திருமொழியில் பத்ததுவும் பெற்றோர்கள்
திருந்தாத புத்திரர்க்கு பகவான்பேர் இட்டழைத்தல்
கலித்துறையின் சார்பாக மோகனத்தில் ரூபகப்பேர்
தாளமது மால்பேரை பெற்றோர்கள் சொல்லிடவும்
பிள்ளைகள் கேட்டிடவும் பிராப்தியது திருவருளே!
ஏழாவது திருமொழியில் பதினொன்றும் தேவப்பிர
யாகையாம் கண்டமெனும் தான் அறுசீர்கழிநெடிலடியில்
ஆசிரிய விருத்தமது அடாணாப்பண் திரிபுடப்பேர்
தாளத்துப் பாட்டெல்லாம் சீர்மைத்து! எட்டாவது
திருமொழியாம் ஈரைந்தும் திருவரங்க முதல்பகுதி
தரவுகொச்சகக் கலிப்பாவாய் சங்கராபர ணராகத்தில்
ஆதிதாளம் இசைப்பாட்டு நெஞ்சுவப்பே!ஒன்பதாவது
திருமொழியில் பதினொன்றும் திருவரங்கத் தொடர்ச்சிரண்டு
அறுசீரில் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமதே
தோடிராக ஆதிதாள அமைப்புடைத்து! திருமாலின்
பேரருளைக் கூட்டுவதால் மாமகிழ்வே ! பத்தாவது
திருமொழியோ ஐயிரண்டு பாவமிழ்து திருவரங்கத்
தொடர்ச்சிமூன்று எண்சீரில் கழிநெடிலடி ஆசிரிய
விருத்தமது ஆரபிபேர் ராகத்தில்ஆதிதாள கூட்டதனால்
அரியருளைச் சேர்த்திடுமே! ஐந்தாவது பத்ததனில்
நான்குமட்டும் கொண்டுளதே! முதலாவது திருமொழியில்
தன்நிலையோ தாழ்வென்று விலகிநிற்றல் மும்மூன்றும்
ஒன்றமைத்து எண்சீரில் கழிநெடிலடி ஆசிரியவிருத்தமாக
தன்யாசிராகஞ்சேர் அடதாளம் பேரின்பம் கூட்டிடுமே!



கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# தொலைத்தலும் தேடலும்!

ஆணவம், அலட்சியம்
மனத்துள் குடிக்கொள்ள
குறைகுடமாய்க் கூத்தாடுகையில்
நம்மை விரும்பிய சொந்தங்களை
நல்ல நண்பர்களை
நாம்தொலைக்க நேர்கிறதே!

நல்ல நூல்களைப் படிக்கையில்
நான் தொலைந்துபோகிறேன்!
தன்னைத் தானறிகையில்
'நான்' என்பதைத் தொலைக்கிறேன்!



உன்னத உறவுகள்
உண்மை நட்புகள்
என்னில் தன்னைக்காணும்
ஆருயிர் மனைவி,பிள்ளைகள்
இவர்களின் அன்புத்தேடலில்
அகப்பட்டுக் கிடைத்துவிடுகிறேன்!
எதிர்பார்ப்பு ஏதுமில்லா
அன்பைப் பொழிகையில்
அதனில் தொலைகிறேன்!

தொலைத்தும் தொலைந்தும்
தொடர்ந்திடும் வாழ்வினில்
தேடல்கள் தொடரும்வரை
வாழ்வில் சுவையிருக்கும்!

கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# சாதி (தீ)

எந்த கடையில் வாங்கிய துணியோ
நம் இருவரின் மானத்தையும் மறைகின்றது
எந்த கடையில் வாங்கிய அரிசியோ
நம் இருவரின் வயிற்றையும் நிறைக்கிறது
ஒரே வகுப்பில் கற்ற பாடம் இருவருக்கும்
பட்டங்கள் வாங்கிக் கொடுத்தது.

உன் மீது தொட்டு செல்லும் காற்றுதான்
என் மீதும் தொட்டு செல்கிறது
உன்னுள் ஓடும் குருதி தான் என்னுள்ளும் ஓடுகிறது
ஆனால் உனக்கு மட்டும் எப்படி
உயர்ந்த சாதி என்ற அந்தஸ்து வந்தது
எனக்கு ஏன் கீழ்சாதி என்று வந்தது.

உங்களின் தேவைகளுக்கு பயன்படும் நாங்கள்
உங்கள் வேலை முடிந்ததும்
தீண்டத்தகாதவர் என்று ஒதுக்கி வைக்கிறீர்களே
இது எந்த விதத்தில் நியாயம்?



ஊருக்குள் நீங்கள் மட்டும் நாங்கள் ஒதுக்குப் புறத்திலா
யார் கொடுத்தது நீங்கள் உயர்ந்த சாதி என்று
எந்த கடவுள் உங்களுக்கு உபதேசம் வழங்கியது?

கீழ்சாதி என்று இந்த சமூகம் பார்க்கும்
பார்வை உங்களுக்கு ஏன் தெரியவில்லை
எங்கள் வலி ஏன் உங்களுக்கு புரியவில்லை.

எங்கள் இடத்திக் இருந்து பாருங்கள்
அப்பொழுது புரியும் எங்கள் வலியும் வேதனையும்
ஆறறிவு மனிதர்கள் தானே நீங்கள்
எங்கள் உணர்வுகளையும் புரிந்து கொள்ளுங்கள்
எங்களுக்கும் இதயம் உண்டு.

கவிஞர் ர. ரமேஷ், திருப்பூர்

# மரம்

மரம் பறவைகளின் ஆதித்தாய்
மரம் பறவைகளின் வாழ்விடம்
மரம் பறவைகளின் வீடு
மரம் பறவைகளின் பசிப்போக்கும் அட்சயபாத்திரம்
மரம் பறவைகளுக்கானது!



கவிஞர் ச. இராஜ்குமார்

# பணமில்லா வாழ்க்கை

"அருள் இல்லார்க்கு
அவ்வுலகம் இல்லையே!
பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லையே!"
***

வாழ்க்கை என்பதோ
ஒரு தேடலென்றால்
பணம் தேடலோ
அதிலோர் அலகே!
***

திருக்குறளும் பிறநூல்களும்
தெளிவூட்டும் ஒருண்மையிது!
பொருளில்லை என்றாலோ
பிணவாழ்வே பூமியிலே!
***

அடுப்படிப் பூனையதும்
அதிகாலையிலே எழும்பிடுமே!
படுக்கையிலே கிடந்தாலோ
பணமென்ன வந்திடுமோ?
***



சோம்பேறிகளாய் வாழ்வதனால்
சோறு யார்தான் தருவாரோ?
சுறுசுறுப்பாய் எறும்புகளாய்
சதாநாளும் உழைப்பதே மேல்!
***

இயந்திரமாய் பிறர் உழைக்க
இரவலனாய் நாம் இருக்கலாமோ?
அயர்ந்து சோர்ந்து இருந்துவிட்டால்
அடுப்பில் நெருப்பு எரிந்திடுமோ?
***

இமயமாய் விலையேற்றம்
இப்புவியில் எங்குமுண்டே!
இதயம் இமயமானால்
இவ்வாழ்வில் பணத்தோப்பே!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், இலங்கை

# ஆகாயத்தில்...

## அத்தியாயம் 1(B)

"பார்த்தீர்களா? காதலுக்காக நீங்க்ள் எதையும் செய்யும் லட்சணம் இது தான். எனக்காக நீங்கள் எதையும் வாங்கி வரவேண்டாம்" திரும்பி நின்று கண்களை துடைத்துக் கொண்டாள் இந்துமதி.

"இதே விஷயம் அரசியலாக இருந்தால் அந்த இடத்தில் எத்தனை உயிர்கள் சேதமாகியிருக்கும். என் அன்பு காதலியே உனக்காக நான் என் கோபங்களை அடக்கிக்கொண்டு கௌரவங்களைத் தூக்கி எறிந்துவிட்டு கேட்கின்றேன். சொல்" அவள் முன்னால் வந்து முழந்தாளிட்டு அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு கேட்டான்.

முதலில் கொஞ்சம் சிரித்தவள், அவன் முன் நெற்றியில் குனிந்து முத்தமிட்டாள் "எனக்கு ஒரு வைர நெக்லஸ் வாங்கி வரமுடியுமா?" என்றாள்.

"அட்ரா சக்கை! என்னால் வைர நெக்லஸ் என்னால் வாங்கித்தர முடியும் இந்து. ஆனால் எனக்காக நீ கொஞ்சம் பொது விஷயங்களில் நேரம் ஒதுக்க அனுமதிக்க வேண்டும்"

கையைத்தட்டியவள், இங்குமங்கும் பார்த்துவிட்டு,

"யாரங்கே இவர் கேட்டதைக் கொடுங்கள்" என்று சொல்லி விட்டுச் சிரித்தாள் இந்துமதி.

"சரி. எனக்கு நேரமாகிறது எல்லோரும் கீழே காத்துக்கொண்டிருக்கிறார்கள்."வேகமாக எழுந்தான் தமிழரசன்.

"கவனமாகப் போய் வாருங்கள்" என்று சொல்லிய இந்துமதி, அவனுடைய தலையை கலைத்துவிட, வாசல் கதவு சப்தமெழுப்பியது.

"தலைவரே சீக்கிரம் கீழே இறங்குங்கள். விமானத்திற்கு நேரமாகி விட்டது" என்று உதவியாளன் முகிலன் சப்தமெழுப்பினான்.

"இதோ" என்று சொல்லிவிட்டு வெளியே வந்தவன் கீழே வந்து வேகமாக காரில் ஏறிப் புறப்பட "தொழில் வளம் காண வெளிநாடு செல்லும் மந்திரி தமிழரசன் வாழ்க" என்று தொண்டர்கள் குரல் எழுப்பினர்.

"...இன்னும் எவ்வளவு நேரமிருக்கிறது" என்று கேட்டவாறு காரில் ஏறினான் தமிழரசன்.



...தொடரும்

இராஜகைநிலவன்

**பிறப்பு:**



தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அடுத்த இடைச்செவல் கிராமத்தில் 1922ஆம் ஆண்டு பிறந்தார் கி.ரா. அவரது இயற்பெயர் ராயங்கல ஸ்ரீ கிருஷ்ணராஜ நாராயண பெருமாள் ராமானுஜம். ஏழாம் வகுப்பு வரை படித்துவிட்டு விவசாயம் பார்த்து வந்த கி.ரா. பின்னர் எழுத்தாளராக மாறினார்.

கரிசல் வட்டார அகராதி என மக்கள் பேசும் மொழிக்கென ஓர் அகராதியை உருவாக்கினார் கி.ரா. சாகித்ய அகாதெமி விருந்து, இலக்கியச் சிந்தனை விருது, கனடா தமிழ் தோட்ட விருது ஆகிய விருதுகளைப் பெற்ற கி.ரா, புதுச்சேரியில் வசித்துவந்தார்.

'நான் மழைக்குத்தான் பள்ளிக்கூடம் ஒதுங்கியவன். பள்ளிக்கூடத்தைப் பார்க்காமல் மழையைப் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டேன்' என்று கூறிக்கொள்ளும் கி.ரா., பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பேராசிரியராக பணியாற்றியவர். கோபல்ல கிராமம், கோபல்ல கிராமத்து மக்கள், அந்தமான் நாயக்கர் ஆகிய நாவல்களை எழுதிய கி.ரா. 'கரிசல் இலக்கியத்தின் தந்தை' என அழைக்கப்படுகிறார்.

**எழுத்தும் பணியும்:**

கரிசல் பூமி மக்களின் வாழ்க்கை, துன்பங்கள், நம்பிக்கைகள், ஏமாற்றங்களை இவரது எழுத்துகள் விவரித்தன. சிறுகதை, குறுநாவல், நாவல், கிராமியக் கதை, கடிதம் என்று தமிழ் இலக்கியத்தின் பல்வேறு தளங்களிலும் முத்திரை பதித்தார்

1958இல் சரஸ்வதி இதழில் இவரது முதல் கதை வெளியானது. இவரின் கதையுலகம் கரிசல் வட்டாரத்து மக்களின் நம்பிக்கைகளையும், ஏமாற்றங்களையும், வாழ்க்கைப்பாடுகளையும் விவரிப்பவை.

## எழுத்தும் பணியும்:

கி.ராஜநாராயணன் இயல்பில் ஒரு விவசாயி. ஒரு தேர்ந்த கதை சொல்லி. 'நான் மழைக்குத்தான் பள்ளிக்கூடம் ஒதுங்கியவன். பள்ளிக்கூடத்தைப்பார்க்காமல் மழையைப் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டேன்' என்று தன்னைப் பற்றிக் கூறிக்கொள்ளும் கி.ரா., பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின்சிறப்புப் பேராசிரியராக பணியாற்றிய பெருமைக்குரியவர். நல்ல இசைஞானம் கொண்டவர்.


ஒரே மூச்சில் ஒரு கதையை எழுதி முடிக்கும் வழக்கம் எனக்கில்லை, எழுதியதைப் படித்து அதை மீண்டும் மீண்டும் அடித்துத் திருத்தி எழுதுவேன் என்பார். முன்பெல்லாம் நண்பர்களுக்கு நீண்ட கடிதம் எழுதும் வழக்கம் கொண்ட கி.ரா. அவர்களது பதில் கடிதங்களை பாதுகாத்து வைப்பாராம். ஆனால் தற்போது கடிதத்துக்கான தேவை இல்லாமல் போய்விட்டது என்றார்

## சாகித்திய அகாதமி விருது:

1991 - கோபல்ல கிராமத்து மக்கள்(நாவல்) சாகித்திய அகாடமி விருது பெற்ற நூல்

கரிசல் வட்டார அகராதி என்று மக்கள் தமிழுக்கு அகராதி உருவாக்கிய முன்னோடி இவரே. சாகித்ய அகாடமிவிருது, இலக்கிய சிந்தனை விருது, தமிழக அரசின் விருது, கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2016ம் ஆண்டுக்கான தமிழ் இலக்கியச் சாதனை விருது.உள்ளிட்ட தமிழின் முக்கிய இலக்கிய விருதுகள் பெற்ற, 98 வயதான கி.ரா. தனது இறுதி காலத்தில் புதுச்சேரியில் வாழ்ந்தார். 2016-17 ஆம் ஆண்டுக்கான மனோன்மணியம் சுந்தரனார் விருது கி.ராவிற்கு வழங்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் நாள் தனது 97ஆம் வயதில் இயற்கை எய்தினார்.

**கோபாலபுரத்து மக்கள் (நாவல்):**




கோபல்ல கிராமத்தின் தொடர்ச்சியே கோபல்லபுரத்து மக்கள் கரிசல்காட்டு

கி. ராஜநாராயணன் அவர்களின் எழுத்தே தனி பாணியில் தான் இருக்கும் என்பது நான் சொல்வதை விட வாசித்து பார்த்து தெரிந்து கொள்வது தான் .

கோபல்ல கிராமம் புத்தகம் காடாய் வனாந்தரமாய் இருந்த கள்ளிக்காடுகளையும், முள்ளுக்காடுகளையும் அழித்து நாடாக்கிய கதையை தன் பாணியில் சொன்ன கிராஅவர்கள்வெள்ளைக்காரன் வந்ததோடுநிறுத்திகொண்டு. கோபல்லபுரத்து மக்களில் அதன்தொடர்ச்சியினை முடித்து இருக்கிறார்.கதைக்களம்காதலில் தொடங்கி நாட்டு சுதந்திரத்தில் வந்து முடித்து வைத்துள்ளது.

கோபல்ல புரத்து மக்களில் இரண்டு பாகங்கள் முதல் பாகத்தில் காதல் கதைக்களத்தை புகுத்தி கொண்டு இரண்டாம் பாகத்தில் சுதந்திர தாகத்தை திணித்து கதையை நல்ல நகர்த்திய விட்டார்.

"முதல் பாகம்" கிட்டப்பனுக்கும் அச்சந்திலுவுக்கும் இடையே ஏற்பட்ட காதலும் காதலில் தொடங்கி மோதலில் முடிந்த இரு குடும்பத்திற்கிடையே பகையால் கிட்டப்பனும் அச்சுந்திலுவும் பிரிந்து. அதனால் கிட்டப்பன் வேறு மனம் முடித்தாலும் அவ்வளவு இனித்ததாக இல்லைவாழ்வும் ,இருந்தும் அவ்வாழ்வை விடுத்து ஓர் வேப்பமர நிழலில் இருவரையும் இணைத்து வைத்து கொண்டார் எப்படியும் அந்த காதலர்களை கடைசியில் சேர்த்து வைத்து விட்ட வாழ்வினை எடுத்து உரைத்த கிரா.

குமார.தர்மசீலன், இதழாசிரியர்

# கி.ராஜநாராயணன்

### கி.ரா-வின் எழுத்துக்கள்:

- அகராதிகள்: கரிசல் வட்டார வழக்கு அகராதி
- சிறுகதைகள்:
- கன்னிமை
- மின்னல்
- கோமதி
- நிலை நிறுத்தல்
- கதவு(1965)
- பேதை
- ஜீவன்
- நெருப்பு (புதினம்)
- விளைவு
- பாரதமாதா
- கண்ணீர்
- வேட்டி

### கரிசல்கதைகள்

- கி.ரா-பக்கங்கள்
- கிராமிய விளையாட்டுகள்

### கிராமியக்கதைகள்

- குழந்தைப்பருவக்கதைகள்
- கொத்தைபருத்தி
- புதுவை வட்டார நாட்டுப்புறக்கதைகள்
- பெண்கதைகள்
- பெண்மணம்
- வயது வந்தவர்களுக்கு மட்டும்
- கதை சொல்லி(2017)
- மாயமான்

### குறுநாவல்:

- கிடை
- பிஞ்சுகள்

### நாவல்:

- கோபல்ல கிராமம்
- அந்தமான் நாயக்கர்
- கோபல்லபுரத்து மக்கள் (சாகித்திய அகாடமி விருது பெற்றது)

### கட்டுரை:

- ருஷ்ய மண்ணின் நிறம் என்ன?
- புதுமைப்பித்தன்
- மாமலை ஜீவா
- இசை மகா சமுத்திரம்
- அழிந்து போன நந்தவனங்கள்
- கரிசல் காட்டுக் கடுதாசி

குமார். தர்மசீலன், இதழாசிரியர்

**தொகுதி:**


- நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம்

**திரைப்படமாக்கப்பட்ட இவர் எழுத்துக்கள்**

- ஒருத்தி (கிடை என்ற கதையினை அடிப்படையாகக் கொண்டு அம்சன் குமார் இயக்கிய திரைப்படம்)

**இறப்பு:**

99 வயது மூப்பால் 11 மணியளவில், புதுச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார். லாஸ்பேட்டை அரசுக் குடியிருப்பில் அஞ்சலிக்கு வைக்கப்படும் இவரின் உடல், 18 மே 2021 மாலை கருவடிக்குப்பம் சுடுகாட்டிற்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படுகிறது.



நாளை

# நமதே

அடுத்தவரோடு
ஒப்பிட்டு உனை நீ
தாழ்த்திக் கொள்ளாதே
உலகத்தில் சிறந்தது
உனக்கு நீயே!

அகர முதல இலக்கிய பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்பிற்கு :

9597887847
8870884969

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com